Embassy of the United States of America

Colombo

# PRESS RELEASE

Public Affairs Section

Tel: +94 (1) 249-8100 Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov Web: lk.usembassy.gov

Release No. 20160930T

## புதிய இணையத்தளத்தை அறிமுகப்படுத்தும் அமெரிக்க தூதரகம்: lk.usembassy.gov

**செப்ரம்பர் 30, 2016:** கைபேசியில் எளிதாக பார்வையிடக் கூடிய, எளிதாக பிரவேசிக்கக் கூடிய மற்றும் சம்பந்தப்பட்ட செய்திகள் மற்றும் தகவல்களுடன் புதிய இணையத்தளத்தை (lk.usembassy.gov) இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிமுகப்படுத்தியது.

விசா கேள்விகள், அமெரிக்க பிரஜைகள் சேவை, வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள், மற்றும் வர்த்தக சந்தர்ப்பங்கள், மற்றும் தூதரகம் சார்ந்த செய்திகள் மற்றும் உரைகள் குறித்த தகவல்களை உடனடியாக பெற்றுக் கொள்வதற்கு புதிய இணையத்தள முதல் பக்கம் உதவும். அடுத்த சில தினங்களுக்குள் எமது முந்தைய இணையத்தளத்தில் (srilanka.usembassy.gov) இருக்கும் விடயங்கள் முழுமையாக புதிய இணையத்தளத்திற்கு மாற்றப்படும்.

கைபேசியில் எளிதாக பார்க்கக் கூடிய வகையிலும், பயனர்களின் காட்சித் திரைக்கு ஏற்ற வகையில் மாறக் கூடியதாகவும், கைபேசி இணைய இணைப்பிலும் வேகமாக பார்க்கக் கூடிய வகையிலும் தூதரகத்தின் புதிய இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இணைய பாவனையானது கைபேசி சார்ந்ததாக பரிமாணம் பெற்று வரும் நிலையில் இந்த முன்னேற்றமானது மிகவும் முக்கியமானதாகும்.

வருடாந்தம் 150 மில்லியன் பயனர்களையும், 618 மில்லியன் வருகைகளையும் ஈர்க்கும் உலகெங்கிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களின் இணையத்தளங்களில் 2007ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்படும் முதலாவது பாரிய மீள்வடிவமைப்பாக இது உள்ளது.

###